**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(29.01.2025 முதல் 02.02.2025)**

**அறிக்கை எண் 88/2024** **தேதி. 28.01.2025**

**பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பெரம்பலூர் மாவட்டத்தின் 24.01.2025 முதல் 27.01.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 30 –°செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 20 - 21 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 11 - 18 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை பெரம்பலூர் (29.01.2025 முதல் 02.02.2025)**

| கடந்த வார வானிலை (24.01.2025 முதல் 27.01.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 02.02.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 24/01 | நாள்-2 25/01 | நாள்-3 26/01 | நாள்-4 27/01 | தேதி | நாள்-1 29/01 | நாள்-2 30/01 | நாள்-3 31/01 | நாள்-4 01/02 | நாள்-5 02/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 24 | 24 | 24 |
| 30 | 30 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 30 | 30 | 31 | 31 |
| 21 | 21 | 20 | 20 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 20 | 20 | 20 | 21 | 21 |
| 5 | 7 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 4 | 4 |
| 85 | 86 | 86 | 93 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 86 | 86 | 86 | 93 | 93 |
| 58 | 66 | 57 | 55 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 57 | 57 | 57 | 55 | 55 |
| 13 | 11 | 18 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 12 | 12 | 10 | 10 |
| கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு |

**பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 31.01.2025 முதல் 02.02.2025 ஆகிய தினங்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 31 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 20 – 21 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 57 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | அறுவடை செய்த நெல் வயல்களில், நெல் தரிசு பயிர்களை (உளுந்து, பச்சைப் பயறு) விதைக்கவும். |
| **நெல்** | **அறுவடை** | மழையினால் ஏற்ப்படும் பாதிப்பினை தடுக்க, அறுவடை நிலையில் உள்ள நெல்லினை மழைக்கு முன் அறுவடை செய்யவும். |
| | | அறுவடை செய்த நெல் விதைகளை மழைக்கு முன் நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகள்** | **மாடு மற்றும் ஆடு** | இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவே இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

அறுவடை செய்த நெல் வயல்களில், நெல் தரிசு பயிர்களை (உளுந்து, பச்சைப் பயறு) விதைக்கவும்.

**இயக்குநர்**